நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 19உ திங்கள் (3—1—55) ★ ★ வெளியூர்: மார்கழி 20உ செவ்வாய் (4—1—55) [இதழ் 174

அளவுக்கதிகமான குடி: 13,000 பேரை பலி கொண்டது!

பாரிஸ், ஜன. 3—

பிரான்ஸ் நாட்டில் கடந்த 1953-ம் ஆண்டில், அளவுக்கு மீறிய குடியினுல் 13,000 பிரெஞ்சுக்காரர்கள் மாண்டனர் என்று பிரெஞ்சு சுகாதார மந்திரி ஆண்ட்ரீ மாண்டெலில் தெரிவித்திருக்கிருர்.

சர்க்காரை ஏமாற்ற சதி செய்தனர்!

பக்ரா - நங்கல் அதிகாரிகள் கைது!

காங்கிரசார் பரணி பாடிய பக்ரா-நங்கல் திட்டம் ஊழல் மயம்!

ஏமாற்றுதல், லஞ்சக் குற்றச்சாட்டுகளில் இதுவரை 8 பேர் கைது!

தனி போலீஸ் இலாகாவினர் விசாரணை!

வடநாட்டு மக்களின் உயர்வுக்காக நிறைவேற்றப்படும் மிகப் பெரிய திட்டங்களில் ஒன்ருன பக்ரா—நங்கல் திட்டத்தில் வேலை செய்யும் பல சர்க்கார் அதிகாரிகளும், கண்டிராக்டர்களும் மிகவும் நாணயக் குறைவாக நடந்து கொண்டார்களென்று குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனராம்.

இவர்கள் நடத்தை பற்றி விசாரணை செய்யும் தனி போலீஸ் இலாகாவினர் பக்ரா—நங்கல் திட்டத்தில் பணியாற்றும் மூன்று உயர்தர அதிகாரிகளை கைது செய்தனர்.

சர்க்காரை ஏமாற்ற சதி செய்ததாகவும், லஞ்சம் வாங்கியதாகவும் இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

இக்குற்றச்சாட்டுகள் பற்றிய புலன் விசாரணை செய்யும் போலீஸ் இலாகாவினர் இதுவரை எட்டு பேர்களைக் கைது செய்துள்ளனர் என்று தெரிகிறது. இப்படி கைது செய்யப்பட்டவர்களில் பக்ரா-நங்கல் திட்ட கண்டிராக்டர்களும் இருக்கின்றனர்.

சர்க்காரை ஏமாற்ற சதி செய்தனர், லஞ்சம் வாங்கினர் என்ற குற்றச்சாட்டுகள் வடநாட்டில், "பக்ரா—நங்கல் அவதூறு" என்று அழைக்கப்படுகிறதாம்.

பக்ரா-நங்கல் திட்டத்தில் செய்திப் போக்குவரத்து பொருள்கள் ஆகியவற்றின் எக்சிகியூடிவ் எஞ்சினீயர் பி. டி. குப்தா, நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த இரண்டு சப்-டிவிஷனல் அதிகாரிகளான பகத்ராம், மில்கி ராம் என்றவர்கள் ஆகிய மூன்று பேரும் தனி போலீஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நகர மாஜிஸ்திரேட் முன்னிலையில் கொண்டு செல்லப்பட்டனர். மாஜிஸ்திரேட் இவர்களை ஒரு நாள் காவலில் வைக்குமாறு உத்திரவிட்டார். இவர்களது ஜாமீன் மனு விசாரணை செய்யப்படும் என்று தெரிகிறது.

கைது செய்யப்பட்ட மூன்று அதிகாரிகளும் பக்ரா—நங்கல் திட்டத்தில் முக்கிய பதவிகளை வகிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சில மாதங்களுக்கு முன்னர் பக்ரா-நங்கல் கால்வாயைத் திறந்து வைக்கும்போது, 'பக்ரா - நங்கல் திட்டம் உலகில் சிறந்த திட்டங்களில் ஒன்று,' என்று நேரு பேசியது, பொதுமக்களுக்கு நினைவிலிருக்கக்கூடும்.

காங்கிரஸ் சர்க்காரின் ஆட்சியில் நிறைவேற்றப்படும் திட்டங்கள் ஊழல் நிறைந்தவை என்பது பொதுமக்களுக்கு அடிக்கடி எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இத்திட்டங்களின் நிர்வாகம் பற்றி இந்தியப் பாராளுமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படும் தணிக்கை அறிக்கைகளும், திட்டக் குழுவின் விவாதங்களும் இத்திட்டங்களில் காணப்படும் ஊழல்களை எடுத்துச் சொல்லிய வண்ணம் உள்ளன.

சர்க்காரை ஏமாற்ற சதி செய்தார்கள், லஞ்சம் வாங்கினூர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு அதிகாரிகளும், கண்டிராக்டர்களும் கைது செய்யப்பட்டிருப்பது காங்கிரஸ் ஆட்சியின் திட்டங்களில் மலிந்து கிடக்கும் ஊழல்களுக்கு மற்ருேர் எடுத்துக்காட்டு எனலாம்.

மத்திய பிரதேசத்தில் நிலக்கரிச் சுரங்கம்

மத்திய அரசாங்கம் வேலை துவங்குகிறது

மத்தியப் பிரதேசத்தில் உள்ள கோர்பா நிலக்கரிச் சுரங்கத்தில் நிலக்கரி தோண்டும் வேலையை சீக்கிரமே மத்திய அரசாங்கம் மேற்கொள்ளும் எனத் தெரிகிறது.

1948-ம் ஆண்டின் தொழிற் கொள்கைத் தீர்மானப்படி, ஆயுதங்கள், வெடிகுண்டுகள், ரயில்வே, அணுசக்திப் பொருள் ஆகியவைகளையெல்லாம் சர்க்காரே தயாரிக்கும் என்பது தவிர, வேறு ஆறு தொழில்களையும் சர்க்காரே நடத்துவது என்ற முடிவில், நிலக்கரி தோண்டுதலும் ஒன்ருகும்.

இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள், கப்பல் கட்டுதல், விமானங்கள் கட்டுதல், தந்தி, கம்பில்லாத் தந்தி, தொலைபேசி முதலியவற்றிற்கான சாதனங்கள் தயாரித்தல், தாதுப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியையும் சர்க்காரே மேற்கொள்ளும்.

நிலக்கரிச் சுரங்கங்களில் சுமார் 800-க்கு அதிகமானவை தனிப்பட்டோரிடமுள்ளன. அவைகளை சர்க்கார் தேசியமயமாக்காது என்ருலும் நிலக்கரி ஒரு அத்தியாவசியப் பொருளாயிருப்பதால், புதியதாகத் துவங்கும் நிலக்கரிச் சுரங்கங்களை சர்க்காரே நடத்த வேண்டுமென்பதற்கொப்பவே மத்திய பிரதேசத் தொழில் துவங்குகிறது எனத் தெரிகிறது.

சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கு டில்லியை வற்புறுத்தவும்

சென்னை சர்க்காருக்கு சேலம் மாவட்ட திட்டக் குழு கோரிக்கை

சேலம், ஜன. 3—

"சேலத்தில் ஏராளமான இரும்பு கிடைப்பதாலும், நெய்வேலியில் நிலக்கரி கிடைப்பதாலும் இந்திய சர்க்கார் அமைக்க உத்தேசித்திருக்கும் இரும்பு தொழிற்சாலைகளில் ஒன்றை சேலத்தில் அமைக்கும் வாய்ப்புக்களை ஆராயுமாறு இந்திய சர்க்காரை சென்னை சர்க்கார் வற்புறுத்த வேண்டும்,"

என்று சேலம் மாவட்ட திட்டக் குழுவினர் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கின்றனர்.

கடந்த டிச. 30-ந் தேதி மாலை நடைபெற்ற சேலம் மாவட்ட திட்டக் குழு கூட்டத்தில் இத் தீர்மானத்தை முன்மொழிந்த எஸ். வி. ராமசாமி, இந்திய சர்க்கார் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இப்பிரச்சினையை 'மனக்கோட்டை' என்று குறிப்பிட்டது பற்றி குழுவினர் வருத்தமுற்றிருக்கலாம் என்று எடுத்துக் கூறினூர்.

மேலும் அவர் பேசுகையில், இப்பிரச்சினை உற்பத்தி இலாகா அமைச்சர் கே. சி. ரெட்டியைச் சேர்ந்தது என்றும் கூறிவிட்டு, அவருக்கும் தமக்கும் இப்பிரச்சினை பற்றி நடந்த கடிதப் போக்குவரத்தை கூட்டத்தில் படித்தார்.

பெல்லாரி மாவட்டத்தில் நெய்வேலி நிலக்கரி உதவியுடன் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிப் பேசுகையில், நெய்வேலிக்கும் பெல்லாரிக்கும் சுமார் 300 மைல் தூரமிருக்குமென்றும், ஆனல் சேலத்திற்கும் நெய்வேலிக்கும் இடையே 100 மைல் தூரம்தான் என்றும், ஆகவே பெல்லாரியைக் காட்டிலும் சேலத்திற்கு இக் கோரிக்கைக்கு அதிக சலுகை இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

பதவியை விட்டு விலகினர்!

'சூடான் சர்க்கார் பதவிகளை சூடான் மக்களே வகிக்க வேண்டும்' என்ற சட்டப்படி, சூடான் சர்க்காரில் பதவியில் இருக்கும் 41 சூடான் அதிகாரிகள் தங்கள் இராஜிநாமாவைத் தந்தனர். இவர்களுக்குச் சட்டப்படி போதிய நஷ்டஈடு தரப்படும் என்று தெரிகிறது.

சென்ற ஆண்டு உத்தரவு அனுப்பப்பட்டவர்களில் 93 பேர் சீக்கிரமே சூடானை விட்டுச் செல்வர் என்று தெரிகிறது.

இந்திய உருக்குத் தொழிலுக்கு ரஷ்ய உதவியை முறியடிக்க முயற்சி

ரஷ்ய நிபுணர் உதவியுடன் உருக்குத் தொழிற்சாலையா?

வட நாட்டுப் 'பண முதலை'யின் எதிர்ப்பு

ஆமதாபாத், ஜன. 3—

"சோவியத் ரஷ்யாவின் நிபுணர்களைக் கொண்டு இந்தியாவில் உருக்குத் தொழிற்சாலை நிறுவுவதினுல் இந்தியாவில் ரஷ்யச் செல்வாக்கு அதிகமாவதுடன் ஏராளமான ரஷ்யக் கம்யூனிஸ்டுகள் இந்தியாவினுள் நுழைவதற்கும் வழிகோலுவதாகும்,"

என்று இந்தியத் தொழிலதிபரான ஏ. டி. ஷராப் குறிப்பிட்டிருக்கிருர்.

அவர் மேலும், "அப்படி ஒரு தொழிற்சாலையை ரஷ்ய நிபுணர்கள் உதவியுடன் துவக்குமுன்

தென்னிந்தியாவில் தொழில் அபிவிருத்தி

மத்திய மந்திரியின் விசித்திர சமாதானம்

"தென்னிந்தியாவின் தொழில் அபிவிருத்தி எப்படி இருக்கும்?" என்ற மத்திய வர்த்தக, தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை நிருபர்கள் கேட்டபோது அவர் கூறியதாவது:—

"தென்னிந்தியாவின் தொழில் அபிவிருத்தி ஆரம்பத்தில் விக்னேட் தொழிலுடன் இணைந்துள்ள ஒன்ருக இருக்கிறது; அப்படியே ஏதேனும் தொழில் வளர்ந்தாலும், அது கோரிக்கைகளை வளர்த்திக்

(4-ம் பக்கம் பார்க்க)

பிரதமர் நேரு, 'கம்யூனிஸ்டுகள் நுழையாமல் பார்த்துக்கொள்வோம்' என்ற உறுதிமொழியினைத் தரவேண்டும்" என்றும் கூறியிருக்கிருர்.

பிர்லாவுக்கு உதவ முன்வந்த பிரிட்டிஷ் நிறுவனம்

இந்திய அரசாங்கத்திற்கு உதவ முன்வருகிறதாம்

இந்தியாவில் ஒரு உருக்குத் தொழிற்சாலை நிறுவுவதில் பிர்லாவுக்கு உதவ முன்வந்த பிரிட்டிஷ் நிறுவனம் நேரடியாகவே இந்திய சர்க்காருக்கு அத்தொழில் நிறுவுவதில் உதவ முன்வரத் தயாராக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

உருக்குத் தொழிற்சாலை நிறுவுவதற்கு ரூ. 60 கோடி செலவாகும் என்றும் அக்கம்பெனி தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

1953—54-ம் ஆண்டில் நமது உணவுத் தானிய உற்பத்தி 1949—50ம் ஆண்டு உணவு தானிய உற்பத்தியைவிட 20 சதவிகிதம் கூடுதலாக இருந்தது.

கோதாவரி திட்ட ஊழல்

ரூ. 40,000 பெறுமான துத்தநாகத் தகடு மோசடி

ஐதராபாத், ஜன. 1—

கோதாவரி அணைக்கட்டுத் திட்ட அலுவலக 2-வது பிரிவு குமாஸ்தாவான அலி-பின்-உமர் என்பவரிடம், ரூ. 40,000 பெறுமான 50 கட்டு துத்தநாகத் தகடுகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததாயும் அவற்றை அவர் மோசடி செய்துவிட்டதாயும் திட்ட எஞ்சினீயர் போலீசாரிடம் புகார் செய்துள்ளார் எனத் தெரிகிறது.

உமர் இப்போது தலைமறைவாகிவிட்டாராம்.

ரூப்நாராயண்பூரில், 110 லட்ச ரூபாய் செலவு செய்து கட்டி முடிக்கப்பட்ட 'இந்துஸ்தான் கேபிள்ஸ் லிமிடெட் கம்பெனி,' தற்போது, ஆண்டொன்றில் 500 மைல் நீளமுள்ள கேபிள் கம்பிகளை உற்பத்தி செய்யும்.

கைத்தறியாளர் ஆதரவு வாரம்: ஜன. 7-13

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை
சென்னை 3—1—1955 திங்கள்

இடத்தின் இயல்பு!

"சேலத்திலா உருக்குத் தொழிற்சாலை? அது மனக் கோட்டை!" எனக் கிண்டல் மொழி வீசினார் இந்தியப் பேரரசில் தொழில்-வர்த்தக மந்திரியாக இருக்கிற டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள், சில நாட்களுக்குமுன். தனது கேலிக்கு, 'அங்கு நிலக்கரி இல்லை' என்ற கூற்றையும் ஒரு ஆதாரமாகக் காட்டினார். அந்தக் கேலி மொழியினால் எத்தகைய விளைவு எதிர்பார்க்கமுடியுமோ, அதே விளைவு புயலென வீசத் தொடங்கியது. சேலத்தில் கிடைக்கும் இரும்பை மக்களுக்குப் பயன்படும்படி மாற்றி அமைக்க, அங்கு ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிறுவுவதில், அந்த அமைச்சருக்கு அனுதாபமோ, அக்கரையோ இல்லை என்ற குற்றச்சாட்டு தீவிரமாகக் கிளம்பியது. அக்குற்றச் சாட்டை, அறிந்தும் அறியாதவர் போல இருந்துவிட அவரால் முடியவில்லை. தன்னிச்சையாகவோ, தனது தோழர்களின் தூண்டுதலினாலோ அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார், தனது கேலிக்கு எதிராக ஏற்பட்ட குற்றச்சாட்டிற்குச் சமாதானம் கூற முற்பட்டார். அதற்காக, பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து முன்னுள்கூறியதற்கு விளக்கங் கூறியுள்ளார்.

ஏற்கனவே, அவர் வீசிய கேலி, அவருடையவாயிலிருந்து தவறுதலாகப் பிறந்திருக்கக் கூடும் எனச் சிலராவதுஎண்ணி இருக்கக்கூடும். ஆனால், அது பற்றி அவர் நிருபர்களிடம் கூறியுள்ள விளக்கமோ, அவர் முன்னர் உமிழ்ந்த கிண்டல் மொழி வேண்டுமென்றே உமிழப்பட்டது என்பதை வலியுறுத்துவதாகவே இருக்கிறது.

சேலத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலை ஏற்படுவதில், கட்டாயம் இருந்து தீரவேண்டிய அனுதாபம் அவருக்கு இல்லாது இருப்பதுடன் மட்டுமன்றி, அப்படி ஒரு தொழிற்சாலை பிறர் முயற்சியில் அங்கு நிறுவப்படுவதாக இருந்தால்கூட, அதையும்கூட அவர் கண்டிப்பாகத் தடுப்பார் எனக் கொள்ளும் போக்கில் மேற்படி அமைச்சரின் விளக்கம் இருக்கிறது.

சேலத்து இரும்பைத் தோண்டி எடுத்து, அதை மக்களுக்குப் பயன்படு பொருளாக மாற்றி அமைக்க ஒரு தொழிற்சாலையை நிறுவி, வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுத்து, குறைந்த வேலை செய்பவர்களின் வேலையைப் பெருக்கி, அதன் விளைவாக அப்பகுதியில் உள்ள மக்களின் இன்ப வாழ்வு பெருகுவதில், அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களுக்கு அனுதாபம் இல்லை என்பதுடன் மட்டுமல்லாமல், அவ்வாழ்வு தர வேறு யாராவது முன்வந்தால்கூட, அதையும் அவர் தடுத்துவிட முயற்சிப்பார் என்ற உண்மையைத்தான், நிருபர்களிடம் அவர் தந்த விளக்கம் நமக்கு அறிவிக்கிறது.

மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், தொழில் துறையில் நிலக்கரிக்கு இருந்த சிறப்பு வேகமாகக் குறைந்து வருகிறது என்பது அனுபவ உண்மை. மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டு வேகமாக வளர்ந்து வர வர, தொழில் துறையில் நிலக்கரியின் தேவையும் மறைந்து வருகிறது என்பதை அனைவரும் ஒப்புவர். மின்சாரத் தோற்றத்திற்கு முன், தொழில் வளர்ச்சிக்கு நிலக்கரி செய்து வந்த உதவி அனைத்தையும், மின்சாரம் பிடித்துக்கொண்டு வருகிறது என்ற மகத்தான உண்மையைத்தான் தொழில் வரலாறு வலியுறுத்துகிறது.

மின்சாரம் கண்டுபிடிக்கப்படாத காலத்தில், நிலக்கரி கிடைக்காத இடத்தில், இயந்திரங்களின் துணைகொண்டு நவீன தொழிற்சாலைகளைத் துவங்க முடியாத நிலை ஒரு காலத்தில் இருக்கத்தான் இருந்தது. மின்சாரம் தலை தூக்கின பிறகு, அந்நிலையில் தலைகீழான மாற்றம் ஏற்பட்டுவிட்டது. எனவே, அங்கு நிலக்கரி கிடைக்காததினால், சேலத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிறுவ முடியாது என அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் அடம்பிடிப்பதில் அர்த்தமே கிடையாது.

சேலத்தில் இரும்புத்தொழிற்சாலை நிறுவப்பட்டால், அதற்கு தேவைப்படும் நிலக்கரியை சிங்கரேணியிலிருந்தோ, ஜாரியாவிலிருந்தோ, டன் ஒன்றுக்கு ரூ. 42 விதம் விலை கொடுத்து வாங்கித்தான் கொண்டுவரவேண்டும்; அதனால் சேலத்து இரும்புத் தொழில் இலாபகரமானதாக இருக்காது என அமைச்சர் கூறுவதில் துளியும் நியாயம் கிடையாது. நிலக்கரிக்குப்பதில் மின்சாரத்தை மேற்படி தொழிலுக்கும் பயன்படுத்தலாம் என்ற நிலை இருக்கின்றபொழுது, அதைவிடுத்து, கிடைக்காத நிலக்கரியின் மீது பழியைப் போட்டு அவர் பேசுவது, சேலத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிறுவுவதில் அமைச்சருக்கு அனுதாபமும் இல்லை, அக்கரையும் இல்லை என்பதைத்தான் விளக்குவதாக இருக்கிறது.

நிலக்கரியைத் தொலைவிலிருந்து விலைக்கு வாங்கிக் கொண்டு வருவதினால் சேலத்து உருக்குத் தொழில் இலாபகரமானதாக இருக்க முடியாது எனும் தனது கூற்றை மெய்ப்பிக்க டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், மைசூர் பத்ராவதி இரும்புத் தொழிற்சாலையை ஒரு எடுத்துக் காட்டாகக் காட்டுகிறார். அங்கு உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு டன் இரும்புக்கும், டன் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் மைசூர் அரசாங்கம் உதவித் தொகை தருவதாகவும், அங்கு உற்பத்தியாகும் இரும்புப் பொருட்களை வாங்கி பயன்படுத்தும் மக்களும், வரி செலுத்துவோரும் ரூ. 6 கோடி வரை, அத்தொழிற்சாலை நிரந்தரமாக நடைபெறுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் உதவி செய்துவருவதாகவும், அவ்வுதவியானது அத்தொழிற்சாலையில் உருவாகும் மொத்த இரும்பின் செலவில் 25 சதவிகிதமாகிறதாகவும், மேற்படி அமைச்சர் தனது பொருந்தாக் கூற்றுக்குப் புள்ளி விவரம் காட்டுகிறார்.

மைசூர் பத்ராவதி உருக்குத் தொழிற்சாலை இலாபகரமாக நடைபெறவில்லை; அதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 கோடி விதம் பொது மக்கள் கப்பம் கட்டி வருவதினாலேயே அத் தொழில் இன்றும் நடைபெற்று வருகிறது என்று அமைச்சர் கூறிடும் தகவல், நூற்றுக்கு நூறு உண்மையாகத்தான் இருக்கும் என ஏற்றுக்கொள்வதற்கில்லை. அதில் பெரும் பகுதியைக் கழித்துத்தான் கணக்கிட்டாக வேண்டும்.

பத்ராவதி இரும்புத் தொழிற்சாலையை, சொந்தப் பொறுப்பில் மைசூர் அரசாங்கம் 1923-ம் ஆண்டில் துவங்கியது. மைசூரில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்கள் அனைத்துக்கும் தொழில் நிபுணர் விஸ்வேஸ்வரய்யா அவர்கள்தான் காரணம் என்பது சொல்லாமலே விளங்கும். நிலக்கரி இல்லையே என்பதற்காக, மைசூர் மாநிலத்தில் மண்ணுக்கடியிலேயே இரும்பு மறைந்துகிடக்கட்டுமென விஸ்வேஸ்வரய்யா விட்டுவிடவில்லை. மேற்படி இரும்புத் தொழிற்சாலையைத் தாம் அதிகாரத்திலிருந்த காலத்தில் துவங்கியே விட்டார்.

சேலத்தில் ஒரு தொழிற்சாலை துவங்க வேண்டுமென்றால், அதை நிறைவேற்றாமல் இருப்பதற்கு, அப்பகுதியில் நிலக்கரி இல்லை என்பதை ஒரு புகலாகக் கூறும் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்று, அனுதாபக் குறைவும் பற்றிலாமையும் அக்காலத்தில் விஸ்வேஸ்வரய்யாவிற்கும் இருந்திருக்குமானால், பத்ராவதி இரும்புத் தொழிற்சாலை ஏற்பட்டு இருக்கவே இருக்காது. மைசூர் தொழில் வளர்ச்சியில் விஸ்வேஸ்வரய்யாவிற்கு இருந்த அனுதாபமும் அக்கறையுந்தான், நிலக்கரி கிடைக்காமல் இருந்துங்கூட, பத்ராவதி இரும்புத் தொழிற்சாலையை 1923-லேயே துவங்க தூண்டுதல் அளித்தன. அவருக்கு இருந்ததுபோன்ற அக்கரையும் அனுதாபமும் இல்லாத காரணத்தால்தான், இல்லாத நிலக்கரி மீது பழிபோட்டு விட்டு, சேலத்து இரும்பை மண்ணுக்குள்ளாகவே ஒளிந்து கிடக்கட்டும் எனும் தொழில் திறம் பேசுகிறார், அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார்.

அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை, இதுவரை, ஒரு தொழில் நிபுணர் என விளையாட்டிற்காகக்கூட கூறினவர்கள் கிடையாது. ஆனால் விஸ்வேஸ்வரய்யாவோ தொழில் நிபுணர் என உலகப் புகழ் பெற்றவர். அத்தொழில் நிபுணர், தொழில்கள் அனைத்துக்கும் இன்றியமையாது தேவைப்படும் நிலக்கரி குறிப்பிட்ட இடத்தில் இல்லாத நிலையிலேயே, பத்ராவதியில் இரும்புத் தொழிலைத் துவங்கி இருக்கிறார். அதுவும் இடைக் காலத்தில் நசித்துவிடாமல், கடந்த முப்பது ஆண்டுகளாக வளர்ந்து வந்திருக்கிறது.

அதை விரிவாக்க இப்போது திட்டமும் தீட்டப்பட்டு இருக்கிறது.

அத்தொழிற்சாலையில் இதுவரை உபயோகப்படுத்திவந்த நிலக்கரி - காட்டுக் கரிக்குப் பதிலாக இனி மின்சார அடுப்பு உபயோகப்படுத்தப் படும். ஏற்கனவே இரண்டு மின்சார அடுப்புகள் நிறுவப் பட்டுள்ளன என்றும், மேலும் ஒன்று முடியும் நிலையில் உள்ளது என்றும், அந்தத் தொழில் நிலையத்தின் பொதுப் பொறுப்பாளர் 'இந்து' இதழின் 'தொழில் மலரில்' எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ளதுபோல், பத்ராவதி இரும்புத் தொழிற்சாலை இதுவரை இலாபகரமற்றுத் தொழிலாக நடைபெற்று வந்தது என்பது உண்மையானாலும், மின்சார உலை ஏற்பாட்டிற்குப் பின் அது இலாபகரமானதாக இயங்கிவரும் என்பதில் ஆட்சேபம் இல்லை. அம்முறையைப் பின்பற்றி சேலத்திலும் ஒரு இரும்புத் தொழிற்சாலையைத் துவங்குவது எல்லா வகையிலும் நியாயமானதேயாகும்.

பத்ராவதி தொழிற்சாலை அரசாங்க உதவியில் நடைபெறுகிறது; அதுபோல பத்ராவதியை சேலத்தில் உருவாக்க முடியாது என அமைச்சர் இப்பொழுது கூறினது போல், இனியும் கூறிடத் தேவை இல்லை. மின்சாரத்தின் துணைகொண்டு இனி பத்ராவதி இயங்கப்போகிறது. அதையே பின்பற்றி சேலம் தொழிற்சாலையையும் இயங்க வைக்கலாம் என்பது விளக்கம். இதற்கு அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் என்ன சொல்லப்போகிறாரோ?

ஜாம்ஷெட்பூர், பரன்பூர், ரூர்கேலா போன்று சேலமும் ஒரு பெரிய இரும்புத் தொழிற்சாலை நகரமாகிவிடும் என எண்ணுகிறார் என, முன் அவர் வீசிய கேலி மொழியினால் ஏற்பட்ட புண் ஆறாமல் இருக்கும் பொழுதே வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல், மீண்டும் கிண்டல் பேசுகிறார், அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார். அவர் வீற்றிருக்கும் இடம், அவரை இப்படி எல்லாம் ஆட்டிப் படைக்கிறது போலும்! இடத்தின் இயல்பு எனச் சொல்வதைத் தவிர, நாம், அவர் கூற்றுக்கு வேறு என்ன கூறுவதற்கு இருக்கிறது?

கிராமப் பஞ்சாயத்துக்களில் 1,500 குமாஸ்தாக்கள் நியமிக்கப்படுவர்

மந்திரி தகவல்

வேலூர், டிச. 31—

கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்கள் வரவு - செலவுக் கணக்குகளை நிர்வகிப்பதில் உதவுவதற்காக சுமார் 1,500 குமாஸ்தாக்கள் நியமிக்கப்படுவார்கள்.

நியமிக்கப்படும் குமாஸ்தாக்கள், படித்துவிட்டு வேலையின்றி இருக்கும் இளைஞர்களாயிருப்பர்.

மூன்று கிராமப் பஞ்சாயத்துகளின் நிர்வாகத்திற்கு ஒரு குமாஸ்தா நியமிக்கப்படுவார்.

இத்தகவலை அரக்கோணம் தாலுகா பஞ்சாயத்து தலைவர்கள் மாநாட்டினைத் துவக்கிவைத்துப் பேசுகையில் மந்திரி கனம் இராமசாமி படையாச்சி வெளியிட்டுள்ளார் எனத் தெரிகிறது.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"கிராமப் பஞ்சாயத்துகளின் கஷ்டங்களை சர்க்கார் உணர்ந்தானிருக்கிறது.

சட்டங்களில் உள்ள குறைகளை நீக்கி பஞ்சாயத்துகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவதற்கு சர்க்கார் ஒரு நிபுணர் குழுவினைச் சீக்கிரமே அமைக்கவிருக்கிறது.

புதிய பஞ்சாயத்து சட்டத்தினை சர்க்கார் புகுத்தியதின் நோக்கமெல்லாம், சர்க்கார் உதவியுடன், கிராம மக்கள் தங்களின் தேவைகளை அப்போதைக்கப்போது தாங்களே பூர்த்தி செய்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை அதிகப்படுத்த வேண்டுமென்பதுதான்; எனவே, பஞ்சாயத்துகள், கிராமங்களில் கோஷ்டிகளை வளர்க்கவும், வரிகொடா இயக்கங்களை ஆதரித்து வளர்க்கவுமான நிலைகளில் இருக்கக் கூடாது.

வரி வசூலிப்பதில் கஷ்டங்களிருப்பது உண்மையே; ஆனால், மக்களுக்கு அதிகமான வசதிகள் செய்து தர வரி விதிப்பும், வசூலிப்பும் அவசியமானதாயுள்ளன.

எப்படி பஞ்சாயத்துக்கள் அதிக வசதியும், உதவியும் கோரி, மாநில அரசாங்கத்தை வற்புறுத்துகின்றனவோ அப்படித்தான் மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றது."

யாத்திரை நகரங்கள் தூய்மை அடையும்?

சாதுக்கள் திரட்டப்படுகின்றனர்

நாகபுரி, டிச 31—

"யாத்திரை நகரங்களை சுத்தமாக வைத்திருக்கும் பொறுப்புக்கு சாதுக்களைப் பயன்படுத்தலாம்," என்று இந்திய சர்க்கார் அமைச்சர் நந்தா நாகபுரி பாரத் சேவா சமாஜ நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார்.

மத்தியப் பிரதேச சமூக ஊழியர்களில் ஒருவரான சாதுக் கோஜி மகராஜ் என்பவர், யாத்திரை நகரங்களில் உள்ள சாதுக்களை ஒன்று சேர்த்து இயக்கமொன்றில் பிணைக்கும் பொறுப்பில் அமர்த்தப் பட்டிருக்கிறார் என்று நந்தா மேலும் தெரிவித்தார்.

'சட்டசபையை கலைக்கவும்'

ஜம்மு பரீஷித் கோரிக்கை

"காஷ்மீர் சட்டசபை மீது நம்பிக்கையில்லை என்று வாக்காளர்களிடம் கையெழுத்து வாங்கும் இயக்கம் ஒன்று சீக்கிரமே ஆரம்பிக்கப்படும்," என்று ஜம்மு பிரஜா பரீஷித்தின் தலைவர் பிரேம்நாத் டோக்ரா கூறினார்.

இப்படி வாக்காளர்களிடம் வாங்கப்படும் கையெழுத்துக்கள், இந்தியாவின் ஜனாதிபதிக்கு அனுப்பப் படுமாம்.

காஷ்மீர் சட்டசபையைக் கலைக்க வேண்டுமென்றும், வயது வந்தோர் அடிப்படையில் காஷ்மீர் சட்டசபைக்குப் புதிய தேர்தல் நடத்த வேண்டுமென்றும், ஜம்மு பிரஜா பரீஷித் இந்திய ஜனாதிபதியைக் கோரும் என்று தெரிகிறது.

டாக்டர் ஜான் மத்தாய்

பம்பாய் பல்கலைக் கழக துணைவேந்தராகிறார்

பம்பாய், டிச. 31—

பம்பாய் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக டாக்டர் ஜான் மத்தாய் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் டாடா அண்ட் சன்ஸ் கம்பெனியின் டைரக்டராவார்.

சென்னை மாநிலக் கல்லூரியில் பொருளாதாரப் பேராசிரியராகவும், இந்திய சர்க்காரின் நிதி அமைச்சராகவும் டாக்டர் மத்தாய் பணியாற்றியவர்.

கழகச் செய்திகள்

பம்பாய்—தாராவி தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

15—12—54 மாலை 6-30 மணியளவில், தாராவி வ. உ. சி. திடலில் தோழர் எல். என். செழியன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் எஸ் தியாகராசன், வடவைக் குயில், நெல்லை இரா. இளம்வழுதி ஆகியோர் சொற்பொழிவாற்றியபின், தோழர் இரா. சு. தங்கப்பழம் அரியதோர் சொற்பொழிவாற்றினார். அவருக்கு பம்பாய், பம்பாய் மாவட்ட தி. மு. கழகங்களாலும், தனிப்பட்டோர் சார்பிலும் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. பின்னர், தூத்துக்குடி சதிவழக்கை திரும்பப் பெறக்கோரியும், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடை சட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மருதூர் தெற்குச்சேத்தி தி. மு. கழகம்

18—12—54 மாலை 6 மணிக்கு, திலகர் திடலில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், செயலாளராக ஆர். சுப்பிரமணியனும், துணைச் செயலாளராக கோ. சண்முகமும், பொருளாளராக சு. சீனுவாசனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஓ. கொண்டலாம்பட்டி தி. மு. கழகம்

13—12—54 மாலை 6 மணிக்கு, ஓ. கொண்டலாம்பட்டி ரேடியோ மைதானத்தில், தோழர் வி கே வெங்கட்டப்பன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. எஸ் அமுர்தம், ஈ ஆர். கிருஷ்ணன், சிற்றுளி-ஏ. சுப்ரமணியம், டி. கே தாமரைச்செல்வன் ஆகியோர் தி. மு. கழக வளர்ச்சி பற்றியும், காங்கிரசின் செல்வாக்கு சரிந்துவருவது பற்றியும் விளக்கிப் பேசினர்.

சேந்தமங்கலத்தில் தி. மு. கழகம் (கிளை) அமைப்பு

19—12—54ல் திருச்சி தோழர் எஸ் நெடுமாறன் தலைமையில் இவ்வூரில் தி. மு. கழகக் கிளை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டு கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: கே. கிருஷ்னன்; துணைச் செயலாளர்: அ இளங்கோவன்; பொருளாளர்: ஐ இராமசாமி; மாவட்டப் பிரதிநிதி: எஸ். ஆர். கிருஷ்ணன்; செயற்குழு உறுப்பினர்கள்: எஸ். ஆர். கிருஷ்ணசாமி, ஐ. இராமசாமி, இரா. நைனுமலை, ஆ. நடராசன், க. செல்லமுத்து, செ. பழனிமுத்து, எஸ். சிவன், எஸ் ஏ. நைனப்பன், ஆர். வி. வருதன், எஸ். ஏ. பெரியசாமி, அ. சோலமுத்து, பி. செல்லமுத்து, எஸ். வி. ரெங்கசாமி, வ. நைனுமலை.

சங்கரநயினார்கோவில் தி. மு. கழகம்

23—12—54ல், தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், 10—1—55ல், ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், இந்நகர் தினசரி மார்க்கெட்டில், மழை காலங்களில் தண்ணீர் வெளியே போகாமல் தேங்கி சகதி அதிகமாகி மார்க்கெட்டுக்குப்போக வர இடைஞ்சலாக இருப்பதாலும், அங்கு குடிதண்ணீர் வசதியில்லாமல் பொது மக்கள் கஷ்டப்படுவதைத் தவிர்க்கவும், மார்க்கெட்டில் மூத்திரப் பறைகள் அமைக்கவும் நகராண்மைக் கழகத்தாரைக் கேட்டுக் கொண்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கோனூர் கந்தம்பாளையம் தி. மு. கழகம்

இவ்வூர் தி. மு. கழகக் கட்டிடம் வேறொரு இடத்திற்கு மாற்றியமைக்கப்பட்டதையொட்டி 24—12—54ல் கழகக் கட்டிடத் திறப்பு விழா தோழர் என். பி. செல்லப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. மி கந்தசாமி, கா. பெருமாள் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின், புதிய நாடக சட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

மணக்கால் தி. மு. கழகம்

25—12—54 இரவு 9 மணிக்கு நடைபெற்ற இவ்வூர் கழகச்செயற்குழு கூட்டத்தில், வரவு—செலவுகள் சரிபார்க்கப் பட்டபின், கழக ஆண்டு விழாவுடன் திராவிடர் திருநாளைக் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டு, புதிய நாடக சட்டத்தைக் கண்டித்தும், அனுதாபத் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

பின்னர் புத்தாண்டிற்கான கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர் :— செயலாளர் : எஸ். பாலமுத்து ; பொருளாளர் : சி. பரமசிவம் ; விளம்பர உறுப்பினர் : ம. கி. சோமசுந்தரம் ; செயற்குழு உறுப்பினர்கள் : தஸ்தகீர், ஆர். பாலகிருஷ்ணன், ஆர். துருவாசன், ப. மாரிமுத்து, எப். தாமஸ், ஆர். மருதை. மாவட்ட உறுப்பினர் : ம. கி. சோமசுந்தரம்.

திருச்சி தி. மு. கழகம்

சிறப்புக் கூட்டமும் பொதுக் கூட்டமும்

"திருச்சி நகர தி. மு. கழகச் சார்பில், திருச்சி தேவர் மன்றத்தில் 26—12—54 காலை 9 மணிக்கு தோழர் எஸ். வி. லிங்கம் தலைமையில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. நாகூர் அனீபா குழுவினர் இன்னிசைக்குப் பின், தோழர் நெடுஞ்செழியன் "ஆகும் நெறி எது? ஆகா நெறி எது?" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினர்.

கூட்ட வசூல்: 412—8—0 ; கூட்ட செலவு—பொதுக்கூட்டம் உட்பட: 225-0-0 ; மீதி இருப்பு: 137—8—0."

* * *

"அன்று மாலை 6 மணிக்கு திருச்சி டவுன்ஹால் மைதானத்தில் தோழர் அன்பில் தர்மலிங்கம் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம், இன்றைய அரசியல் குறித்து தோழர்கள் நெடுஞ்செழியன், எம். எஸ். மணி, கோவை செழியன் ஆகியோர் பேசிய பின் கூட்டம் 9 மணிக்கு முடிவுற்றது," என தோழர் எம். எஸ். மணி அறிவிக்கிறார்.

ஆத்தூர் தி. மு. கழகம் (நெல்லை மாவட்டம்)

26—12—54ல், தோழர் எம். எஸ். அபுசாலி (நெல்லைச் சுடர்) தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: மா. கல்கண்டரசு; துணைச் செயலாளர்: இல. அ. துரைபழம்; பொருளாளர்: து. கந்தையா; மாவட்டப் பிரதிநிதி: தாராசேட் திரவியம்; விளம்பர உறுப்பினர்: து. கந்தையா. மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், நாடகத் தடை சட்டத்தைக் கண்டித்தும், திரு-கொ-வில் தமிழர்களைச் சுட்டுக் கொன்ற பட்டம் தாணு ஆட்சியைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருத்துறைப்பூண்டி வட்ட தி. மு. கழக செயற்குழு கூட்டம்

26—12—54 மாலை 5½ மணியளவில், தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி வட்ட 4-வது செயற்குழு கூட்டத்தில், சென்னை சர்க்காரின் புதிய நாடகத் தடை சட்டத்தைக் கண்டித்தும், அடுத்த ஐந்தாவது வட்ட செயற்குழு கூட்டத்தை 20—1—55ல் திருத்துறைப்பூண்டி கழக இல்லத்தில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

பொதுக் கூட்டம்

அன்று மாலை 6½ மணிக்கு, இவ்வூர் தெற்கு வீதியில் தாலுகா தி. மு. கழகச் சார்பில் மேட்டுப்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சண்முகம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் ந. தருமலிங்கம் அவர்கள் பேசியதும், தோழர் என். வி. நடராசன் அவர்கள் தி. மு. கழகத்தின் தொண்டுகள் பற்றியும், புதிய நாடகத் தடைச் சட்டத்தின் தீங்குகள் பற்றியும் விரிவாகச் சொற்பொழிவாற்றினர் கூட்டத்திற்கு சுற்றுவட்ட கிராமங்களிலிருந்தெல்லாம் மக்கள் வந்திருந்தனர். கூட்டத்தில், தோழர் எஸ். கலியாணசுந்தரம் அவர்களது சகோதரியின் மகனுக்கு, தோழர் நடராசன், 'மதிவாணன்' என்று பெயர் சூட்டினர்.

உலிபுரம் தி. மு. கழகம்

26—12—54 மாலை 8 மணியளவில், கழக அலுவலகத்தில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: ஆ தி. ர. துரைசாமி ; துணைச் செயலாளர் : மு. அறிவாயுதன் ; பொருளாளர் : நா. இராமமூர்த்தி ; விளம்பர உறுப்பினர்கள் : வீ. வையாபுரி, தி. இராசு.

இவ்வூர் கழக ஆதரவில் இயங்கிவரும் பாரதிதாசன் படிப்பகத்தின் பொறுப்பாளர்களாகத் தோழர்கள்: இல. ராமசாமி, மு. ராமசெயம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர், கழக முதலாண்டு விழாவின் வரவு-செலவு கணக்கு சரி பார்க்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டது.

நெல்லைநகர தி. மு. கழகம்

26—12—54 காலை 11 மணிக்கு தோழர் வெ. திருப்பாற்கடல் தலைமையில் நடைபெற்ற செயற் குழு கூட்டத்தில், தேசிகவிநாயகம், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மைத்துனர் அரங்கநாதன், தோழர் கே. ஆர். இராமசாமி அவர்கள் தாயார் ஆகியோர் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்ட பின்னர், தோழர் எம். ஆர். இராதாவின் நாடகத்தைத் தடை செய்ததோடு அவரையும் கைது செய்து சிறை வைத்திருப்பதைக் கண்டித்தும், நாடக சட்டத்தைக் கண்டித்தும், திரு-கொச்சி தமிழர் மீது பட்டம் சர்க்கார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோடு, வரும் பிப்ரவரி திங்கள் முதல் வாரத்தில் இங்கு ஓர் பொதுக் கூட்டம் நடத்தி, சென்ற ஆண்டில் நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்குப் பாதுகாப்பு நிதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

கணியூர் தி. மு. கழகம்

26—12—54-ல், தோழர் கே. கோயால்சாமி தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், பொங்கல் விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டு, பின்னர் தோழர் கே. அய்யாவு வாழ்க்கைத் துணைவியார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

கண்ணமங்கலம் தி. மு. க. பொதுக் கூட்டம்

27-12-54ல் தோழர் அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் மணிஎழிலன் தி. மு. கழகத்தின் கடந்தகால போராட்டங்கள் குறித்தும், கழக ஆக்கவேலைகள் பற்றியும், திராவிட நாடு பற்றி மாற்றாரிடையே நிலவிவரும் தவறான கருத்துக்களுக்குத் தெளிவு காட்டியும் சொற்பொழிவாற்றினர்.

எருமப்பட்டி தி. மு. க.

27—12—54ல் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், தலைவர்கள் செல்லும் இடங்களில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு நிதி சேர்ப்பதோடு, சந்தாவும் சேர்க்க முயற்சிக்கவேண்டுமென்றும், கூடிய சீக்கிரம் மத்தியக் கழகம், திராவிட தொழிற் சங்கங்களையும், விவசாய சங்கங்களையும் நிறுவ முயற்சிக்கவேண்டுமென்றும், பேளூரில் நடைபெற இருக்கின்ற தி மு. கழகப் பொதுக் குழு கூட்டத்தில், நாடகத் தடை சட்டம்பற்றி தீவிரமாக யோசித்து ஒரு முடிவுகட்டுமாறு தலைமைக் கழகத்தையும், பொதுக்குழு உறுப்பினர்களையும் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பாலகுடி தி. மு. க.

28—12—54ல், தோழர் பி. முத்துக்கண்ணு தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், சென்னை சர்க்காரின் புதிய நாடக தடை சட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாச்சியார்கோவில் தி.மு.க.

28—12—54 இரவு 8 மணிக்கு, தோழர் எஸ். துரை தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் நாடகத் தடை சட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புது கும்மிடிபூண்டியில் தி.மு.க. பிரசாரக் கூட்டம்

28-12-54 இரவு 8½ மணியளவில், கும்மிடிப்பூண்டிக் கருகிலுள்ள இக்கிராமத்தில், கும்மிடிபூண்டி தி. மு கழகச் சார்பில், அவ்வூர் நாட்டாண்மைக்காரர் திரு. அ. குப்பு (ரெட்டியார்) தலைமையில் ஒரு பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் : ஆ. கிருஷ்ணன், புலியரசு, இசையரசு, இராதாமணாளன், கு. இராசமாணிக்கம் ஆகியோர் தி. மு. கழகத்தின் சமுதாய, பொருளாதார, அரசியல் கொள்கைகள் குறித்து விளக்கியும் பேசிவிட்டு, திராவிட நாட்டுப் பிரிவினைக்கு விவசாயப் பெருங்குடி மக்களின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

சேலம் நகர தி. மு. கழகம்

30—12—54 இரவு 10 மணிக்கு சேலம் 13-வது வட்டம் நல்லாங்குத்து கிளைக் கழகக் கட்டிடத்தில் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, ஆண்டு விழா வரவு - செலவு கணக்குகளை ஒப்புக் கொண்டும், 1-வது வட்டச் சார்பில் புதிதாக அனுப்பிய பிரதிநிதிகளை ஏற்றுக்கொண்டும், நாடக சட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

மா. கருங்குளம் (நெல்லை - மாவட்டம்) தி. மு. கழகம்

தோழர் ம. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில் நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் : மு. மதியரசு; துணைச்செயலாளர் : இரா. சுப்பையா ; பொருளாளர் : ம. சண்முகசுந்தரம் ; மாவட்டப் பிரதிநிதி: எஸ். சுடலைமுத்து. (நடைபெற்ற தேதி குறிப்பிடப்படவில்லை.)

ஆசிரியருக்குக் கடிதம் :

தலைமை ஆசிரியரை நீக்கவே மாணவர் போராட்டம்

ஆசிரியர் : 'நம் நாடு'

ஐயா,

15—12—54 'நம் நாடு' இதழில் "கரூர் வட்டத்தில் மாணவர் வேலை நிறுத்தம்" என்ற தலைப்பில் வந்த செய்தியைக் கண்டு நாங்கள் திடுக்குற்றோம். இது விஷயம் பற்றி தங்களுக்கு வந்துள்ள செய்திகள் முழுப் பொய்யாக இருப்பதால்இங்குள்ளநிலைமைகளை விளக்கி, நடைபெற்ற உண்மைச் சம்பவங்களை அறிவிக்கிறோம் :—

"தமிழாசிரியர் மாணவிகளைப் பாடும்படி வற்புறுத்தவில்லை—பாடச் சொல்லவும் இல்லை ; க. இராசு என்ற மாணவர்தான் அப்பாட்டை ஆறும்படிவ மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி தமிழாசிரியரின் அனுமதியின் பேரில் பாடினார். பாடப்பட்டது தனி வகுப்பில்-பள்ளி நாட்களின் போதும் அல்ல. பாடத்தில் 'பொங்கும் நிலவே' என்ற சொற்றொடர் வருகிறது ; அதைப் பார்த்தவுடன் நாங்கள், 'கொஞ்சும் புறாவே' என்ற பாட்டில் இந்த அடி வருவதால் அதைப் பாடும்படி கேட்டோம்; அம்மாணவரும் பாடினார்.

தமிழாசிரியர் மாற்றப்பட்டது இக்காரணம் பற்றி அல்ல ; அவர் மீது தலைமையாசிரியர் நடவடிக்கை எடுக்கவில்லை—எடுக்கவும் முடியாது. நா. கா.-வினர் திடீரென்று காரணமின்றி தமிழாசிரியரை மாற்றினார்கள்.

தலைமையாசிரியர் ஒரு பார்ப்பனர். அவர் எங்களை பல மாதங்களாக வரம்பு மீறி திட்டிக்கொண்டு வந்தார். 'தமிழில் என்னடா இருக்கு?'—வள்ளுவன் ஏதாவது செய்தான்னு இருக்காடா?' 'குறளை எவன்டா ஒத்துக்குவான்?' 'தமிழ் ஒரு சாக்கடை மொழி'—'கழுதைத் தமிழ் ;' 'தமிழர்கள், உலகத்திலேயே திருடர்கள், அயோக்கிய நாய்கள்' என்றும், 'தமிழாசிரியர்களை அடக்கவே நான் வந்திருக்கேன்' 'தமிழை ஒழிக்கவே வந்திருக்கிறேன்' என்றும், 'மாணவர்'களை செருப்பால் அடிப்பேன்' என்றும் திட்டி வந்தார். இவைகளைக் கண்டித்து, இத்தலைமையாசிரியரை வேலையிலிருந்து நீக்கி வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று கோரி நாங்கள் வேலை நிறுத்தம் செய்தோம்.

தமிழாசிரியர் மாற்றப்பட்டது, எங்களுக்கு கடவுள் வணக்கத்தின் போதுதான் தெரிந்தது. உடனே எங்கள் மனம் துன்புற்றது. 'அயோக்கியத் தலைமையாசிரியரை மாற்றாமல் தமிழ்த் தொண்டு புரியும் தமிழாசிரியரை என் மாற்றினார்கள்? இதைத் தடுக்க என்ன செய்வது?' என்று சிந்தித்து எல்லா மாணவர்களும் வேலை நிறுத்தம் செய்தோம்.

வேலை நிறுத்தம் நான்கு நாட்கள் தொடர்ந்து செய்தோம்—ஆனால் மாறுதல் காணோம். பிறகு பொது மக்களில், சிலர் முக்கியமான சில மாணவர்களிடம் வந்து 'உங்கள் கோரிக்கை என்ன?' என்று கேட்டதற்கு, 'தலைமையாசிரியரை இப்பள்ளியைவிட்டு மாற்றவேண்டும்—அல்லது வேலையைவிட்டு நீக்கவேண்டும் ; பின்பு தமிழாசிரியர் இங்கு திரும்பவும் மாற்றப்படவேண்டும் ; அதுவரை வேலைநிறுத்தம் செய்வோம்,' என்றனர்.

அவர்கள் எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாயும், தற்போது 'பொறுக்குத் தேர்வை' முன்னிட்டு பள்ளி செல்லுமாறும் வேண்டினர். அதன் பின் நாங்கள் பள்ளி சென்றோம்.

வேலை நிறுத்தத்தையொட்டி ஊர்வலமும் நடத்தினோம். இவைகள் தான் நடந்தவை. தற்போது நாங்கள் பள்ளி சென்றுகொண்டு இருக்கிறோம். விரைவில் மாறுதல்களை எதிர்பார்க்கிறோம்.

(மொத்தம் 50 மாணவர்கள் கையெழுத்திட்டு இவ்வறிக்கையினை அனுப்பியுள்ளனர்., ஆ-ர்.)

பிரிட்டிஷ் இரயில்வேயில் வேலை நிறுத்தம்?

நான்கு இலட்சம் தொழிலாளர்கள் கலந்துகொள்வர்

லண்டன், ஜன. 3—

பிரிட்டனில் உள்ள இரயில்வே தொழிலாளர்கள், வருகிற ஞாயிறு முதல் வேலை நிறுத்தம் துவங்குவார்கள் என்று தெரிகிறது.

ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியைச் சேர்ந்த 11,000 தொழிலாளர்கள், தங்களது மூன்று நாள் வேலை நிறுத்தத்தை நிறுத்திவிட்டனராம். ஆனால், 4,00,000 இரயில்வே தொழிலாளர்கள் ஜனவரி 6-ந் தேதியன்று வேலை நிறுத்தத்தில் இறங்குவார்கள் என்ற முடிவு மாற்றப்படும் என்ற நம்பிக்கை எதும் இருப்பதாகத் தெரியவில்லை.

லண்டனில் சர்க்கார் நியமித்த நீதிமன்றம், இரண்டு நாட்களாக இரயில்வே தொழிலாளர்களின் ஊதியக் கோரிக்கை பற்றி விசாரணை செய்து முடித்துவிட்டது.

சர் ஜான் காமரன், சர் காலின் ஆண்டர்சன், ஹாரி டக்லஸ் என்ற விசாரணைக் குழு உறுப்பினர்கள் இப்போது விசாரணையின்போது கிடைத்த சாட்சியங்களைப் பரிசீலனை செய்துள்ளனர். இவர்கள் தங்கள் சிபாரிசுகளை வியாழனன்று பிரிட்டனின் இரயில்வே அமைச்சர் சர் வால்டர் மாங்க்டன் என்பவரிடம் தருவார்கள்.

1953-ம் ஆண்டு ஜூலையில் கேட்ட 15 சதவிகித சம்பளக் கோரிக்கையை தொழிலாளர்கள் இன்னும் வற்புறுத்துகிறார்களாம்.

சமாதான மாநாடு முடிவுற்றது

சென்னை, ஜன. 2—

சென்னையில் கடந்த நான்கு தினங்களாக நடைபெற்றுவந்த அகில இந்திய சமாதான ஆசிய ஐக்கிய மாநாடு இன்றுடன் முடிவுற்றிருக்கிறது.

மாநாட்டில், சீனாவும் இந்தியாவும் மேற்கொண்டிருக்கிற 'பஞ்சசீல'க் கொள்கைகளை ஆதரித்தும், கோவா மக்களின் விடுதலைப் போரைப் பாராட்டியும், பார்மோசாவிலிருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறக் கோரியும், காலனிப் பிரச்சினை, உலக சமாதானப் பிரச்சினை பற்றியவும் இன்னும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மாநாட்டின் இறுதி நாளான இன்று சென்னை செயின்ட்மேரி மண்டபத்திலிருந்து பகல் 2 மணி சுமாருக்கு பல்லாயிரவர் கலந்துகொண்ட ஒரு ஊர்வலம் புறப்பட்டு திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்தது.

ஊர்வலத்தில் 'யுத்த வெறியன்' என்ற ஒரு கொடும்பாவி பொம்மை வண்டி ஒன்றில் நிறுத்திவைக்கப்பட்டு, பலர் அந்த பொம்மையை செருப்பால் அடித்துக்கொண்டே சென்று கடற்கரையில் கொளுத்தினர். அந்த சமாதான மாபெரும் ஊர்வலத்தில் சிலம்ப விளையாட்டு, பொய்க்கால் குதிரையாட்டம் இவை இடம் பெற்றிருந்ததுடன், 'ராமன்' 'சீதை' 'அனுமார்' முதலியோரும் இடம் பெற்றிருந்தனர்.

அந்த 'வேடங்'களிடையே சமாதான கோஷங்கள் எழுதப்பட்ட அட்டைகளைத் தாங்கி சென்னையில் உள்ள பல தொழிற் சங்கத்தினரும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் உலகில் சமாதானம் நிலவ அனைவரும் பாடுபட வேண்டுமென்று வற்புறுத்திப் பேசப்பட்டது.

சீனக் கலாச்சாரத் தூதுக் குழுத் தலைவர் செங்-சென்-டோ, டாக்டர் சைபுதீன் கிச்சுலு, திருமதி பிரிட், சினிமா நட்சத்திரங்களான பால் ராஜ், எம். ஜி. இராமச்சந்திரன், மற்றும் ஏ. கே. கோபாலன்,

டாக்டர் ஜெ. சி. குமரப்பா, பண்டித சுந்தர்லால், மற்றும் பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

காங்கிரஸ் மாநாட்டிற்கு வரவேற்பு குழு தலைவர்

திருமதி அம்புஜம்மாள் தேர்வு

சென்னை, ஜன. 2—

ஆவடியில் இம்மாதம் கூடவிருக்கும் 60-வது இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபையின் வரவேற்புக் குழுத் தலைவராக திருமதி எஸ். அம்புஜம்மாள் (காலஞ்சென்ற திரு. என். சீனிவாசய்யங்காரின் மகள்) ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

காங்கிரஸ் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவராக ஒரு பெண்மணி இருப்பது இதுவே முதல் தடவை எனக் கூறப்படுகிறது.

சென்னை—கோவை டெலிபோன் வசதி

கோவை, ஜன. 2—

சென்னை, கோவை இவற்றிடையே தூரம்பேசி (டெலிபோன்) இணைப்பு ஏற்படுத்திக்கொள்ளும் வகையில் 12 பிரிவுகள் கொண்ட 'காரியர்' டெலிபோன் சாதனம் நேற்று முதல் வேலை செய்யத் துவங்கியுள்ளது.

தென்னிந்தியாவில் இம்மாதிரியான புதிய டெலிபோன் சாதனம் இப்போதுதான் அமைக்கப்படுகிறதாம்.

விடுமுறை நாள் விபத்துக்கள்

நியூயார்க், ஜன. 2—

புது வருடத்திற்காக அளிக்கப்பட்ட விடுமுறையின்போது சாலை விபத்துக்களில் 103பேரும், மற்றும் தீ விபத்து போன்ற இதர விபத்துக்களில் 21 பேரும் உயிரிழந்தனர் எனத் தெரிகிறது.

பெரியார் ஈ. வெ. ரா.

சிங்கப்பூர், ஜன. 3—

திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி, தமது பர்மா, மலேயா சுற்றுப் பயணங்களை முடித்துக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து 'எஸ். எஸ். ரஜுலா' என்ற கப்பலில் ஜனவரி 9-ந் தேதி தாயகம் திரும்புவார் என்று தெரிகிறது.

சென்னைக்கு அவர் 17-ந் தேதி காலையில் வந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு அமெரிக்கக் கைதிகள் விடுதலை

ரஷ்யாவின் நிபந்தனை

ரஷ்யாவில் இதுவரை சிறை வைக்கப்பட்டிருந்த இரு அமெரிக்கர்களை விடுதலை செய்வதாக சோவியத் யூனியன் உறுதி கொடுத்திருப்பதாக அமெரிக்க அயல் நாட்டிலாக்கா அறிவித்துள்ளது.

இதற்குப் பதிலாக மேற்கு ஜெர்மனியில் உள்ள 11 சோவியத் குழந்தைகளை விடுவிக்க வேண்டுமென்று ரஷ்யா கோரியுள்ளதென்றும் அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

பட்நகர் மறைவு

புதுடில்லி, ஜன. 2—

இந்திய சர்க்கார் இயற்கை—மூலாதார விஞ்ஞான ஆராய்ச்சி இலாகா மந்திரி காரியாலயச் செயலாளரான டாக்டர் எஸ். எஸ். பட்நகர் நேற்றிரவு 8-30 மணியளவில் இயற்கை எய்தினார்.

அவருக்கு வயது 60 ஆகிறது. 1945-ம் ஆண்டிலேயே அவர் வாழ்க்கைத் துணைவியாரும் காலஞ் சென்றுவிட்டார். அவருக்கு 2 பிள்ளைகளும், 2 பெண்களும் இருக்கின்றனர்.

(சென்ற ஆண்டு சுதந்திர தினத்தன்றுதான் (1954 ஆகஸ்டு 15-ல்) அவருக்கு இந்திய சர்க்காரால் 'பத்ம விபூஷண்' கௌரவப் பட்டம் அளிக்கப்பட்டது நினைவிருக்கலாம்.)

இன்று மாலை புதுடில்லி நிகாம்பாதில் பட்நகரின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. பண்டித நேரு, மற்றும் பல அதிகாரிகளும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

தென் கொரியாவைக் காப்பாற்ற அணுகுண்டுகளை உபயோகிப்பாராம்

கம்யூனிஸ்டுகளுக்கு அமெரிக்க இராணுவத் தலைவர் எச்சரிக்கை!

சியோல், ஜன. 2—

"கம்யூனிஸ்டுகள் மீண்டும் தென் கொரியாவில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களானால், அமெரிக்கப் படையினர் அணுகுண்டுகளை உபயோகிக்கத் தயங்கமாட்டார்கள்,"

என்று, அமெரிக்க இராணுவ அலுவலகத் தலைமை அதிகாரி அட்மிரல் ராத்போர்டு தேசீயச் சீன அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த பார்மோசாவிற்கு வந்தபொழுது குறிப்பிட்டுள்ளார்.

சிங்மென் ரீ பேசுகிறார்

'வடகொரியாவில் உள்ள கம்யூனிஸ்டு துருப்புகளை நாட்டைவிட்டு வடகொரியர்கள் அனுப்பிவிட்டால், தென் கொரியாவில் உள்ள ஐ. நா. துருப்புகளை வெளியே அனுப்ப தான் ஏற்பாடு செய்ய முடியும்' என்று தென் கொரிய ஜனாதிபதி சிங்மென் ரீ கூறினார்.

இதன் மூலம் சுதந்திரமாகத் தேர்தல் நடத்த முடியுமென்று அவர் மேலும் கூறினார்.

துறைமுகத்திற்குள் வராதே!

கம்யூனிஸ்டு துறைமுகங்களுக்கு சென்றுவரும் 15 கப்பல்கள் பார்மோசா துறைமுகங்களுக்கு வரக்கூடாது என்று தேசீயச் சீனா தடை விதித்திருக்கிறது. இவற்றில் 11 கப்பல்கள் பிரிட்டனில் பதிவு செய்யப்பட்டவையாகும்.

மின்சாரத் தொழிலாளர் மறியல்?

வேலை நிறுத்தத்தை தீவிரமாக்க முடிவு

பெங்களூர், ஜனவரி 2—

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் மைசூர் மாநில மின்சார இலாகா தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் தீவிரப்படுத்துவதென்று முடிவெடுத்திருக்கின்றனராம்.

ஜன. 3-ந் தேதி முதல், பெங்களூர் மின்சார இலாகா நிலையங்களில், 15 பேர்களடங்கிய குழுவினர்களாக மறியலில் ஈடுபடுவதென தொழிலாளர்கள் முடிவு செய்திருக்கின்றனராம்.

மதுரையும் திருச்சியாகிறது!

தலைவர்மீது நம்பிக்கையில்லையாம்

சொந்தக் கட்சி உறுப்பினரே கூறுகின்றனர்

மதுரை நகரசபைத் தலைவரான திரு. எ. சிதம்பரம் முதலியார் தமது பதவியை ஜனவரி 5-ந் தேதிக்குள் ராஜினாமாச் செய்யாவிட்டால், தாங்கள் மதுரை பிராந்திய ரெவின்யூ அதிகாரிக்கு எழுதி தலைவர் மீது தங்கட்கு நம்பிக்கை இல்லை என்று கூறப்போவதாக 13 காங்கிரஸ்காரர்கள் அச்சுறுத்தியிருக்கிறார்களாம்.

அவர்கள் தமிழ் நாடு காங்கிரஸ் செயற்குழுத் தலைவருக்கும் கடிதம் எழுதி, தலைவரை ராஜினாமாச் செய்யுமாறு வற்புறுத்தியுள்ளனராம்.

சத்தியாக்கிரகம் செய்ய முடிவு

காட்மண்டு, ஜன. 2—

தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காக நேபாள காங்கிரஸ் சத்தியாக்கிரகம் செய்ய முடிவு செய்திருக்கிறதாம்.

நேபாள இளவரசரிடம், நேபாள காங்கிரஸ் தலைவர்களால் இதுபற்றிய மகஜர் தரப்பட்டுள்ளதாம்.

தென்னிந்தியாவில்.........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொண்டே இருக்கும். லிக்னைட் தொழில் வெற்றிபெற்றால், தென் இந்தியாவில்தொழில்வளமாகலாம். எனவேதான், லிக்னைட் தொழிலை முன் வைத்து தென்னிந்தியத் தொழில் அபிவிருத்தியைக் கணக்கிடவேண்டியுள்ளது.

"ஒன்றரை ஆண்டுக்கு முன், தென்னிந்தியாவில் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நான் சுற்றுப்பயணம் செய்தேன். அமராவதி திட்டத்திற்காக ரூ. 2 கோடி தருவதாக அங்குள்ள மக்கள் கூறியிருந்தனர். அத்திட்டத்தை மத்தியஅரசாங்கத்திடம் நான் சிபாரிசு செய்தேன்; அத்திட்டத்தை மேற்கொள்ளுவதில், அப்பிரதேச மக்கள் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 700 அபிவிருத்தி வரியாகத் தருவதாக ஒப்புக்கொண்டிருந்த போதிலும், பரீட்சார்த்தமாக அத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் கஷ்டங்கள் இருந்தன; ஆனால், இன்று நாம் ரூ. 55 கோடிக்கும் அதிகமான செலவில் ஒரு திட்டத்தை மேற்கொள்ளுவதில் நம்மை நாமே உள்ளாக்கிக் கொண்டிருக்கிறோம்; இது, 'நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்,' என்பதைக் காட்டுகிறது: இதனால் 'தென்னிந்தியா புறக்கணிக்கப்படவில்லை,' என்பது தெரிகிறது."

****

மதுரை மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

மதுரை ஆரப்பாளையம் ஞானஒளிவுபுரத்தில் அமைந்துள்ள சௌந்திரபாண்டியனார் பந்தலில் நடைபெறும்

8—1—55 சனி:	9—1—55 ஞாயிறு:
சமூக சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர்: சத்தியவாணிமுத்து	தலைவர்: மு. கருணாநிதி
திறப்பாளர்: தில்லை வில்லாளன்	திறப்பாளர்: எம். பி. சுப்பிரமணியம், M.L.A.

இரு நாட்களிலும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், காஞ்சி கல்யாணசுந்தரம், க. அன்பழகன், சி. பி. சிற்றரசு, கி. மனோகரன், அ. பொன்னம்பலனார், கண்ணதாசன், டி. கே. சீனிவாசன், ஆசைத்தம்பி, ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., அரங்கண்ணல், கே. வி. கே. சாமி, தங்கப்பழம், இளம்வழுதி, வி. எம். ஜான், இளமுருகனார், கே. ஆர். ராமசாமி, எம். எஸ். ராமசாமி, சுரதா, தோழியர்கள் அருண்மொழி, பூங்கோதை ஆகியோர் கலந்துகொள்வார்கள்

8—1—55 இரவு 10½ மணிக்கு	9—1—55 இரவு 10½ மணிக்கு	இரு நாட்களிலும்
எஸ். எஸ். இராசேந்திரன்	எம். ஜி. இராமச்சந்திரன்	நாகூர் அனிபா,
குழுவினர் நடிக்கும்	குழுவினர் நடிக்கும்	பி. எஸ். செல்வா
'சந்திரமோகன்'	'ஆசை நினைவு'	இசை நிகழ்ச்சிகள்

இரு நாட்களுக்கும் அனுமதி விவரம்: (நாடகங்கள் உட்பட)

வரவேற்பாளர் ரூ. 5; பிரதிநிதி ரூ. 2; பார்வையாளர் ரூ. 1; பெண்களுக்கு அணா 8

—வரவேற்புக் குழுவினர்

****

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,